# DEPOSITION OF WITNESS
# In the court of the Judicial Magistrate No.V, Madurai
# Case No: CC 1014/23
# PW: 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr. Prakashkumar | Caste | : |
| Husband/Father's Name | : Tr. Kavikennady | Calling | : |
| Village | : 23 Raj thevar compound, Sammattipuram 2nd st, | Religion | : |
| Taluk | : Madurai | Age | : 32 /2024 |

**20th day of February 2024**

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது SBI வங்கியில் Assistant Manager ஆக பணிசெய்து வருகிறேன். கடந்த 7 வருடங்களுக்கு கரிமேடு காவல்நிலையத்தில் எனது நண்பரின் இருசக்கர வாகனம் தொலைந்து போனது சம்பந்தமாக எனது நண்பருடன் சென்றிருந்தபோது போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினர். வழக்கு குறித்து வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வைமகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 அக குறியீடு செய்யப்பபடுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27.10.2016 ம் தேதி பகல் 1 மணியளவில் நானும் விக்னேஷ் என்பவரும் மதுரை ரயில்வே மேற்கு நுழைவுவாயில் வழியாக நடந்து சென்றபோது மதுரை கரிமேடு காவல்நிலைய சார்பு அய்வாளர் இருசக்கர வாகன திருட்டு சம்பத்தை பற்றி கூறி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வரைபடம் போலிசார் என் முன்னிலையில் வரைந்ததுதான். என்னுடன் சேர்ந்து விக்னேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கேட்டபோது ஏன் கூறவில்லை என்றால் சரியாக புரிந்து கொள்ளமுடியாததால் கூறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பாலசுப்பிரமணியன் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அவருடைய இருசக்கர வாகனம் திருட்ட போனதற்காகதான் புகார் கொடுக்கசென்றபோது கையெழுத்து போட்டேன். என்னுடன் விக்னேஷ் என்பவரும் காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டார். காவல்நிலையத்தை தவிர வேறு எங்கும் கையெழுத்து போடவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரயில்வே காலனியில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**